**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.110/2013</u>**

பெயர்-திரு. தேன்மொழி நாள்.11.11.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனது பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன். எனக்கு எழுதப் படிக்க தெரியும். நான் யார் மீது, என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், தாவா சொத்து எனது மாமனாருக்கு சொந்தமானது, அதில் எனக்குள்ள உரிமைக்கான இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எனது மகள்கள் பிருந்தா, விஜயலட்சுமி வாண்மதி மற்றும் இளவர் இந்துமதிக்காக அவர்கள் சார்பில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மூவரும் தற்போது 18 வயது அடைந்துவிட்டார்கள் என்றால், சரிதான். 2-ம் வாதியாக இருந்த பிருந்தாவை இவ்வழக்கில் இருந்து விடுவித்து, 16-வது பிரதிவாதியாக இடமாற்றம் செய்துள்ளேன் என்றால், சரிதான். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தபோது, 2-ம் வாதியாக இருந்த 16-ம் பிரதிவாதியாக மாறிய பிருந்தாவிற்காகவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். 16-ம் பிரதிவாதி பிருந்தா தற்போது என்னுடன் இல்லை. தனியாக இருக்கிறார். 16-ம் பிரதிவாதி தனித்து சாட்சியம் அளிக்க உரிமையுள்ளது என்றால், சரிதான். அதனால், பிருந்தாவிற்காகவும் நான் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால், எனது மாமனாருக்கு பாத்தியம். எப்படி பாத்தியம் என்றால், எனது மாமனாருக்கு அவரது அப்பா வழியில் கிடைத்த சொத்து. வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் ஆவணத்தை பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை. வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், தாவா சொத்தில் எனக்கும் எனது மகள்களுக்கும் உரிமை கேட்டுள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து பட்டா வகையில் பாத்தியப்பட்டது என்று கூறியிருந்தால், சரிதான். எனது மாமனாருக்கு 8 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர். மேற்படி நபர்களை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன். எனது மாமனாருக்கு வேறு எங்கு சொத்துக்கள் உள்ளது என்றால், கொளத்தூரில் உள்ளது.

**பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது மீண்டும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.11 14:42:45 +0530

District Munsif